நகராட்சி நிர்வாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை—9.

<u>கடித எண் 24450/நநி 4(1)/2007-1, நாள் 28.08.2007.</u>

<u>அனுப்புனர்</u>

திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், எழிலகம், சென்னை—5

அய்யா,

| | |
|---|---|
| பொருள் | சொத்து வரி — ஒசூர் நகராட்சி — 1.10.98 அன்று சொத்துவரி பொது சீராய்வின்போது புதிய கட்டிடங்களுக்கான ஆண்டு வாடகை மதிப்பு கணக்கீடு செய்ய கேட்ட கோரிக்கையினை குழு மூலம் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தது— அரசு உத்தரவு வழங்கப்பட்டது — தெளிவுரை அளித்தல் தொடர்பாக. |
| பார்வை | 1) அரசாணை (நிலை) எண்.89, நநி.(ம)கு.வ.துறை, நாள் 21.6.2007<br>2) நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண்.18555/2007/ஆர்1, நாள் 25.7.2007 |

- - - - -

பார்வை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் ஒசூர் நகராட்சியில் 01.10.98 அன்று சொத்துவரி பொது சீராய்வின் போது புதிய கட்டிடங்களின் ஆண்டு வாடகை மதிப்பினை கணக்கீடு செய்ய நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல அடிப்படை மதிப்பினை (Zonal Basic Value) குறைத்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள தங்களாது கடிதத்தில் மேற்படி அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளை நடைமுறைப்படுத்தும் தேதி 1.10.1998 எனத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளீர்கள்.

2. தங்களது கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலித்து அதனடிப்படையில், மேற்படி அரசாணை(நிலை) எண்.89, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.6.2007 இல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகள் நடைமுறைப்படுத்தும் தேதி 1.10.1998 என தெளிவுரை வழங்க பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசுச் செயலாளருக்காக.

நகல்

ஆணையர், ஓசூர் நகராட்சி, ஓசூர்.

(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 600 009.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை—9.

செயலாளர், பொது (SC) துறை, சென்னை—9

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்)துறை, சென்னை—600009

இ.கோ. / உதிரி நகல்.